Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 25, 2025

செவ்வாய்க்கிழமை 25, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 186 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE




## விஞ்ஞான வினாத்தாள் செய்தி போலியானது

க.பொ.த. சாதாரண தரம் விஞ்ஞான பரீட்சை வினாத்தாள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவும் செய்தி போலியானது என கல்வியமைச்சு விளக்கமளித்துள்ளது.

கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் பெயரை முறைகேடாகப் பயன்படுத்தி போலியான முறையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்று சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

தொடர்ச்சி P2

## "மத்திய சூழ்ச்சிக்கு எதிராக உயர் நீதிமன்றம் செல்வோம்"




நிதர்ஷன் விநோத்

யாழ். மாநகர சபைக்கான வேட்பு மனு நிராகரிப்புக்கு, மத்திய அரசின் சூழ்ச்சியே காரணமெனத் தெரிவித்துள்ள தொழிலதிபர் சுலக்சன், ஞானபிரகாசம் சுலக்ஷன், வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக எனது தலைமையிலான சுயேச்சைக்குழு உயர் நீதிமன்றத்துக்குச் செல்லும் என்று எச்சரித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## "முக்கூட்டு வதந்தி பொய்"

முன்னாள் ஜனாதிபதிபதிகளான மஹிந்த, ரணில் ஆகியோருடன், ஐக்கிய மக்கள் சக்தி இணையவுள்ளதாக வெளியாகியுள்ள வதந்தி பொயாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

யாருடனும் சேர வேண்டிய தேவை, ஐக்கிய மக்கள் சக்திக்கு இல்லை. நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பெரும் வெற்றியடைவதைத் தடுக்க, வங்குரோத்து அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து பொய்யான செய்திகளைப் பரப்பி வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்ட உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுடன் ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம் செய்ததையே மீண்டும் செய்வது முறைமை மாற்றமல்ல. மக்களை ஏமாற்ற ஐக்கிய மக்கள் சக்தி அச்சப்படுகின்றது. பொய்யை நம்ப வைப்பதற்கும், மக்களை அரசியல் ரீதியாக ஏமாறுவதற்கும் நாம் பயப்படுகிறோம். ஐக்கிய மக்கள் சக்தியானது முடிவுகளை எடுக்கும் விடயத்தில் சரியான முடிவுகளையே எடுத்து வருகின்றது.

இன்று அரசாங்கமானது பல்வேறு தலைப்புச் செய்திகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தி பல்வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேர முயற்சிக்கின்றது என போலியான செய்திகளைக் கட்டமைத்து வருகிறது. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் அத்தகையதொரு தீர்மானத்துக்கு வராது. நாம் இவர்களோடு இணையோம். ஐக்கிய மக்கள் சக்தி முதன்முறையாக உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதாலேயே இவ்வாறான செய்திகளை வெளியிடுகிறார்கள் என்றார்.

## ஜனாதிபதி அனுரவின் எம்.பி. ஓய்வூதியம் நிறுத்தம்



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகப் பெற்று வந்த ஓய்வூதியம் அடுத்த மாதம் முதல் நிறுத்தப்படும் என்று பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து பாராளுமன்ற நிதி இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.


பாராளுமன்ற உறுப்பினராக ஒருவர் ஐந்து ஆண்டுகள் நிறைவு செய்திருந்தால், அவர் பாராளுமன்ற ஓய்வூதியத்திற்கு உரிமையுடையவர், அவர் ஜனாதிபதியாகி ஓய்வு பெற்றவுடன், அவர் ஜனாதிபதி ஓய்வூதியத்திற்கும் உரிமையுடையவர்.

இந்த வழியில் இரண்டு ஓய்வூதியங்களை விரும்பவில்லை என்று அனுர குமார திசாநாயக்க கடந்த 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினராகப் பெறும் ஓய்வூதியப் பலன்களை நீக்குவதாக அனுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் அறிவிப்பதற்கு முன்பு, அவர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கும் கடிதம் மூலம் தகவல் தெரிவித்திருந்தார். பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அந்தக் கடிதத்தை அதன் நிதி இயக்குநருக்கு அனுப்பியிருந்தார்.

### இரவு விடுதி விவகாரம்

## யோஷிதவுக்கு தொடர்பில்லை



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ, கொழும்பு, பார்க் வீதியில் உள்ள இரவு விடுதியில் நடந்த கைகலப்பில் ஈடுபடவில்லை என்பது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இரவு விடுதிக்கு வெளியே யோஷித ராஜபக்ஷவுடன் வெள்ளிக்கிழமை (21) வந்த ஒரு குழு மோதலில் ஈடுபட்டதை அடுத்து, கொம்பனித்தெரு பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கினர்.

இந்த வாக்குவாதம் சிசிரிவி கேமராக்களில் பதிவாகியுள்ளது. இந்த சம்பவத்தின் போது கிளப்பைச் சேர்ந்த ஒரு பவுன்சர் காயமடைந்து தற்போது மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்.

தொடர்ச்சி P2

## வாக்குச் சீட்டுகள் அச்சிடல் ஆரம்பம்

மே மாதம் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணி ஞாயிற்றுக்கிழமை(23) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

மாவட்ட செயலகங்களிலிருந்து பெறப்பட்ட விபரங்களின் அடிப்படையில், நிறுவப்பட்ட நடைமுறையின்படி வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். இந்நிலையில் வாக்குச்சீட்டுகளை அச்சடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டள்ளதால் அரச அச்சக கூட்டுத்தாபன ஊழியர்களின் விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## "பாடசாலைகளுக்கு 29 % செல்வதில்லை"

2024ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பாடசாலை சார்ந்த மாணவர் சுகாதார கணக்கெடுப்பின்படி, இலங்கையில் உள்ள 3.5 மில்லியன் இளம் பருவத்தினரில் (10-19 வயதுடையவர்கள்) 71 சதவீதமானோர் பாடசாலைக்குச் செல்கிறார்கள், அதே நேரத்தில் 29 சதவீதமானோர் பாடசாலைக்குச் செல்வதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## 'தலதா' கண்காட்சி குறித்து போலி செய்தி



கண்டி ஸ்ரீ தலதா மாளிகை கண்காட்சி தொடர்பாக வாட்ஸ்அப் மூலம் பகிரப்படும் ஒரு போலி விளம்பரம் தொடர்பில் ஸ்ரீ தலதா மாளிகையின் அதிகாரப்பூர்வ முகநூல் பக்கத்தில் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஸ்ரீ தலதா கண்காட்சிக்கு யார் வேண்டுமானாலும் நன்கொடை அளிக்கலாம் என்றும்,

தொடர்ச்சி P2

## "பாலியல் குற்றங்கள் அதிகரிப்பு"



இலங்கையில் பாலியல் வன்கொடுமை குற்றங்கள் மற்றும் வீட்டு வன்முறைகள் ஆபத்தான முறையில் அடிக்கடி பதிவாகி வருவதாக குழந்தைகள் மற்றும் பெண்கள் பணியகத்தின் பிரதி இன்ஸ்பெக்டர் ஜெனரல் (டிஐஜி) ரேணுகா ஜெயசுந்தரா கூறியுள்ளார்.

2024ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் வழக்குகள் 2,252 பதிவாகியுள்ளதாகவும், அதில் அதிக எண்ணிக்கையிலான சம்பவங்கள் வீட்டில் (1,420 வழக்குகள்) நடப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## 3 சபைகளுக்கு வேட்பு மனு ஏற்றல்

மன்னார், பூனகரி மற்றும் தெஹியத்தகண்டிய ஆகிய மூன்று பிரதேச சபைகள் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணி திங்கட்கிழமை (24) ஆரம்பிக்கப்பட்டது என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது 27ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் முடிவடையும் என்றும், வைப்புத்தொகையை ஏற்றுக்கொள்வது 26 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் முடிவடையும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக மேற்படி மூன்று பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது தாமதமானது என்பது குறிப்பிடத்தக்கது.

## போலி AI காணொளி; ஏமாற வேண்டாம்




மத்திய வங்கியால் தடைசெய்யப்பட்ட முதலீட்டு முறைகளை அங்கீகரிப்பதாக AI தொழில்நுட்பத்தின் மூலம் தவறாக உருவாக்கப்பட்டு சமூக ஊடகங்களில் பரவி வரும் காணொளி தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை தொடங்கியுள்ளதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் பரவி வரும் இந்த காணொளி குறித்து பொதுமக்களை எச்சரிக்கும் அறிக்கையை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## "Govpay இல் அபராதம் செலுத்தலாம்"




போக்குவரத்து அபராதங்களை Govpay மூலம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது.

வாகன சாரதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், பொதுமக்கள் விரைவில் Govpay மூலம் போக்குவரத்து அபராதங்களை செலுத்த முடியும் என்று ICTA) நிறுவன உறுப்பினர் ஹர்ஷா புரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அடிப்படைப் பணிகள் ICTA யால் முடிக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

Govpay என்பது வரிகள், அபராதங்கள்,

தொடர்ச்சி P2

## "விமானிகளின் தவறால் K-8 விமானம் விபத்து"



பயிற்சி விமானிகளின் தவறு காரணமாகவே இலங்கை விமானப்படையின் K-8 பயிற்சி ஜெட் விமானம் வாரியப்பொலவில் மார்ச் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விபத்துக்குள்ளானதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களிடம் பேசிய அமைச்சர் ரத்நாயக்க, விபத்து குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் விசாரணை அறிக்கையின் நகலைக் கேட்டுப் பெற்றதாகக் கூறினார். அறிக்கையின்படி, விமானம் மற்றும் இயந்திரங்கள் நன்கு பராமரிக்கப்பட்டவை என்பதுடன் பழையவை அல்ல என்று அவர் மேலும் தெளிவுபடுத்தினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “மத்திய சூழ்ச்சிக்கு எதிராக உயர் நீதிமன்றம் செல்வோம்”





யாழ். ஊடக அமையத்தில், திங்கட்கிழமை (24) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

எமது சுயேச்சைக் குழு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் எனது தலைமையில் யாழ்ப்பாணம், கோப்பாய், வேலணை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தது.

இதில், யாழ். மாநகரின் வேட்புமனு பெண் வேட்பாளரின் உறுதியுரை குறித்த விடயம் தொடர்பிலான சர்ச்சையால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், சட்டத்தின் பிரகாரம் நாம் வேட்புமனுவை சமர்ப்பித்திருந்தோம்.

அதன்படி, யாழ். மாநகர சபைக்கான எமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த முடிவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வோம் என்றார்.

# யோஷிதவுக்கு தொடர்பில்லை



இரவு விடுதியில் பேட்ஜ் அணிவது கட்டாயம் என்று பாதுகாப்பு காவலர் தெரிவித்ததை அடுத்து, இரவு விடுதியின் பவுன்சர்களுக்கும் குழுவிற்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து இந்த மோதல் நடந்ததாக தெரிவிக்கப்பட்டது.

குழு உறுப்பினர்களில் ஒருவருக்கு அத்தகைய பேட்ஜ் இல்லாததால், பாதுகாப்புக் காவலர் நடத்திய விசாரணையின் போது வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதம் ஏற்பட்டபோது யோஷித ராஜபக்ஷவும் அவரது மனைவியும் அந்த இடத்தை விட்டு வெளியேறிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.




# விஞ்ஞான வினாத்தாள் செய்தி போலியானது

குறித்த அறிவித்தலுக்கமைய ‘இம்முறை வினாத்தாள் பாடவிதானத்திற்கு அப்பாற் சென்று வினா வடிவங்கள் மாற்றப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்குத் தீர்வாக விஞ்ஞான பாட பரீட்சைக்கு முகங்கொடுத்த அனைத்து மாணவர்களுக்கும் மேலதிகமாக 8 புள்ளிகள் வழங்கப்படுமெனவும் ஏ சித்திக்கான புள்ளிகளின் மட்டம் 10 புள்ளிகளால் குறைக்கப்பட்டுள்ளதாகவும், 65 புள்ளிகளை விடவும் அதிக புள்ளிகளைப் பெறும் அனைவருக்கும் திறமை சித்தி கிடைக்குமெனவும்’ குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தகவல் போலியான முறையில் தயாரிக்கப்பட்டு சமூக ஊடகங்களில் மாத்திரம் பரவும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று எந்தவொரு தீர்மானமும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வியமைச்சு அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்பதைப் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறித்த ஒவ்வொரு அறிவித்தலும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வியமைச்சின் கடித தலைப்புடன் அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் கடித தலைப்புடன் உரிய அதிகாரிகளின் கையொப்பத்துடன் கல்வியமைச்சின் ஊடக பிரிவினால் ஊடகங்களுக்கு முறையான சரிபார்ப்பின் பின்னரே அனுப்பப்படும்.

இதன்காரணமாக, அவ்வாறான போலி தகவல்களுக்கு ஏமாற்றமடைய வேண்டுமெனப் பொதுமக்களிடம் மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம் என்றும் கல்வி அமைச்சு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “பாடசாலைகளுக்கு 29 % செல்வதில்லை”

13 முதல் 17 வயதுக்குட்பட்ட எடை குறைந்த மாணவர்களின் சதவீதம் 21.4 ஆகும் என்றும், அதிக எடை கொண்டவர்களின் சதவீதம் 12.1 என்றும் அறிக்கை காட்டுகிறது. பாலினம் மற்றும் வயதின் அடிப்படையில், ஒன்று அல்லது இரண்டு சிகரெட்டுகளைப் புகைக்க முயற்சித்த அல்லது பரிசோதித்த மாணவர்களின் சதவீதம் 12.8 சதவீதமாகும் என்றும் அறிக்கை காட்டுகிறது.

மேலும், 22.4 சதவீத மாணவர்கள் தனிமையை உணர்ந்ததாக அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. 11.9 சதவீதமானோர் பதட்டம் காரணமாகத் தூங்குவதில் சிரமப்படுகிறார்கள், மேலும் 18 சதவீதமானோர் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர். மேலும், 7.5 சதவீதமானோருக்கு நெருங்கிய நண்பர்கள் இல்லை. கூடுதலாக, 62.6 சதவீதமானோர் பாடசாலை நாட்களில் 8 மணி நேரத்திற்கும் குறைவாகத் தூங்குவதாகத் தெரிவித்தனர்.

இந்த கணக்கெடுப்பு 2024 இல் நடத்தப்பட்டது, இதில் 40 அரசாங்க பள்ளிகளில் 8-12 ஆம் வகுப்புகளில் பயிலும் 3,843 மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அதன்படி, 13 முதல் 17 வயதுக்குட்பட்ட இளம் பருவத்தினர் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# ‘தலதா’ கண்காட்சி குறித்து போலி செய்தி



பணம் நன்கொடை அளிப்பவர்கள் வங்கிக் கணக்கின் விவரங்களை வழங்கி அதில் பணத்தை வைப்பு செய்யுமாறு பதிவிடப்பட்டுள்ள விளம்பரம் போலியானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கண்காட்சிக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்படும் என்றும் ஸ்ரீ தலதா மாளிகை கூறியுள்ளது.

ஸ்ரீ தலதா மாளிகை, எந்தவொரு தனிநபர், குழு, அமைப்பு அல்லது வேறு எந்த வகையான நிதி திரட்டல் அல்லது வேறு எந்த நிறுவன நடவடிக்கையையும் நம்பவில்லை எனவும் கூறியுள்ளது.

# “Govpay இல் அபராதம் செலுத்தலாம்”

பயன்பாட்டு பில்கள் மற்றும் கல்விக் கட்டணங்கள் போன்ற அரசு தொடர்பான சேவைகளுக்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரப்பூர்வ நிகழ்நிலைக் கட்டண தளமாகும்.

கொழும்பில் சமீபத்தில் நடந்த ஒரு சந்திப்பின் போது பேசிய ஹர்ஷா புரசிங்க, புதிதாக நியமிக்கப்பட்ட ICTA சபை, Govpay டிஜிட்டல் கட்டண தளம் முன்னோடியாக செயல்படுத்தப்பட்ட போதிலும் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதைக் கண்டறிந்ததாக தெரிவித்தார்.




“பல நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த பிறகு, குறுகிய காலத்திற்குள் பல புதிய அம்சங்களுடன் Govpay இறுதியாக பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. நாங்கள் 7 ஆம் திகதி Govpay ஐ அறிமுகப்படுத்தியபோது, எங்களிடம் 16 அரசு நிறுவனங்கள் இருந்தன. இன்றைய நிலவரப்படி, எங்களிடம் 25 நிறுவனங்கள் உள்ளன. ஒவ்வொரு வாரமும், நாங்கள் புதிய பொது நிறுவனங்களைச் சேர்த்து வருகிறோம்," என்று புரசிங்கே கூறினார்.

# போலி AI காணொளி; ஏமாற வேண்டாம்

சட்டத்தால் தடைசெய்யப்பட்ட முதலீட்டு முறைகளை மத்திய வங்கி ஆளுநர் அங்கீகரிப்பதாக தவறாக சித்திரிக்கும் இந்த காணொளிகளின் நோக்கம், மக்களை முதலீடு செய்ய வழிநடத்துவதாகும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனவே, இத்தகைய மோசடி நடவடிக்கைகளுக்கு இரையாகாமல், தகவலின் துல்லியத்தை சரிபார்க்க மத்திய வங்கியின் அதிகாரப்பூர்வ வலைத்தளமான http://.cbsl.gov.lk மற்றும் அதிகாரப்பூர்வ




ஆதாரங்களைப் பார்க்க வேண்டும் என்றும், சந்தேகத்திற்கிடமான தகவல்களை தெளிவுபடுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் அதிகாரப்பூர்வ தொடர்பு வழிகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் மத்திய வங்கி இத்தால் கேட்டுக்கொள்கிறது.

# மற்றுமொரு விவகாரம் கோப் குழுவில் அம்பலம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் உள்ள இலங்கை யுத் சேர்விஸ் (தனியார்) நிறுவனம் விநியோகஸ்தராகப் பதிவுசெய்து, இளைஞர் சேவைகள் மன்றத்திற்கே கேள்விப்பத்திரங்களை முன்வைக்கும்போது அதிக விலையை வழங்கியுள்ளமை அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) உபகுழுவில் தெரியவந்தது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை யூத் சேர்விஸ் (தனியார்) நிறுவனத்தின் 2022ஆம் ஆண்டு மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் 2025 பெப்ரவரி 18 மற்றும் 20ஆம் திகதிகளில் கோப் குழுவில் வழங்கப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி ஆராயும் நோக்கில் நியமிக்கப்பட்ட உபகுழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம ஹெட்டியாராச்சி தலைமையில் கடந்த 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயம் தெரியவந்தது.

ஸ்மார்ட் யூத் தொடர் நிகழ்ச்சித்திட்டத்தில் குதிரைப் பந்தயத் திடலில் இடம்பெற்ற இசைநிகழ்ச்சி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் தொடர்பில் காணப்படும் சகல வீடியோ பதிவுகளையும் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு முன்னாள் தலைவர் பசிந்து குணவர்த்தனவுக்கு வழங்கிய அறிவுறுத்தல் குறித்தும் உபகுழு அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பியது. இது தொடர்பான வீடியோ பதிவுகள் தமக்குக் கிடைத்திருப்பதாக அதிகாரிகள் பதிலளித்தனர். இதற்காக 120 இலட்சம் ரூபா குறித்த வீடியோ தயாரிப்பு நிறுவனத்துக்கு வழங்கியமை குறித்தும் குழு நீண்ட நேரம் கவனம் செலுத்தியது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் உள்ள நிறுவனமான இலங்கை யூத் (தனியார்) நிறுவனம் விநியோகஸ்தர் என்ற ரீதியில் அதிக விலையில் குறித்த கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு, பிறிதொரு நிறுவனத்திற்கு அதனை வழங்கியிருப்பதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும், ஸ்மார்ட் யூத் கண்காட்சி உள்ளிட்ட தொடர் நிகழ்ச்சித் திட்டங்கள் மதிப்பாய்வு அறிக்கைகளைப் பெற்றுக் கொண்ட பின்னரே முன்னெடுக்கப்பட்டதாக முன்னாள் தலைவர் தெரிவித்திருந்த போதும், அவ்வாறான மதிப்பாய்வு அறிக்கையொன்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திடம் இல்லையென அதிகாரிகள் தெரிவித்தனர்.

# “பாலியல் குற்றங்கள் அதிகரிப்பு”

பொது போக்குவரத்து (261 வழக்குகள்), ஒன்லைன் தளங்கள் (192 வழக்குகள்), சாலைகள் (117 வழக்குகள்), பணியிடங்கள் (41 வழக்குகள்), பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி வகுப்புகள் (20 வழக்குகள்), மத இடங்கள் (9 வழக்குகள்) மற்றும் பல்வேறு இடங்கள் (192 வழக்குகள்) ஆகியவை பிற இடங்களில் அடங்கும்.

பாலியல் துன்புறுத்தலுக்கு



அப்பால், வீட்டு வன்முறை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. இது தொடர்பில் ஆண்டுதோறும் சுமார் 130,000 புகார்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றார்.

## ஐ.நாவின் நிரந்தர பிரதிநிதியாக

# முன்னாள் தலைமை நீதிபதியை நியமிக்க அங்கீகாரம்

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் இரண்டு தூதர்கள், ஒரு உயர் ஸ்தானிகர் மற்றும் ஒரு நிரந்தர பிரதிநிதியை நியமிப்பதற்கான பரிந்துரைகளை உயர் பதவிகளுக்கான குழு அங்கீகரித்துள்ளதாகப் பாராளுமன்ற தகவல் தொடர்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, கியூபா குடியரசிற்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்படுவதற்காக ரத்நாயக்க முதியன்செலாகே மஹிந்த தாச ரத்நாயக்க மற்றும் ஜப்பானுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்படுவதற்காகப் பேராசிரியர் பிவிதுரு ஜனக் குமாரசிங்க ஆகியோரின் பரிந்துரைகள் உயர் பதவிகளுக்கான குழுவால் அங்கீகரிக்கப்பட்டன.

கிரேட் பிரிட்டன் மற்றும் வடக்கு அயர்லாந்து ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர் ஸ்தானிகராக நியமிக்கப்படுவதற்கான சேனாதீர டுமுன்னகே நிமல் உபாலி சேனாதீரவின் பரிந்துரையும் உயர் பதவிகளுக்கான குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாக நியமிக்க முன்னாள் தலைமை நீதிபதி ஜெயந்த சந்திரசிறி ஜெயசூர்யாவின் பரிந்துரையை உயர் பதவிகளுக்கான குழு அங்கீகரித்தது.

# “விமானிகளின் தவறால்...

“ குறிப்பிட்ட விமானத்தை இயக்கிய விமானிகள் பயிற்சியில் இருந்தனர். அவர்களால் ஒரு தவறு நடந்துள்ளது. பயிற்சியாளர்கள் விபத்தில் இருந்து தப்பியதில் நாங்கள் நிம்மதியடைகிறோம். இது பயிற்சியின் போது ஒரு சாதாரண சம்பவம், உலகம் முழுவதும் நடக்கும்,” என்று அவர் கூறினார்.



# தேர்தல் தொடர்பில் 6 முறைப்பாடுகள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய 06 முறைப்பாடுகள், ஞாயிற்றுக்கிழமை தமக்கு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் விதிகளை மீறியது தொடர்பில் இந்த முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதில் தேர்தல் வன்முறை தொடர்பான எந்த முறைப்பாடும் பதிவாகவில்லை என பொலிஸார் கூறியுள்ளனர்.

மாத்தளையில் மூன்று முறைப்பாடுகளும் கெபிதிகொல்லாவ,மொனராகலை மற்றும் பொலன்னறுவையில் இருந்து மூன்று முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் 2025 மே 06 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.









## தேசப்பிதாவுக்கு...

சுதந்திர இலங்கையின் முதல் பிரதமரும், தேசப்பிதா என்று பெயர் பெற்றவருமான மேதகு டி.எஸ். சேனநாயக்காவின் 73ஆவது நினைவு விழா கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் மார்ச் 22ஆம் திகதியன்று நடைபெற்றது.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள டி.எஸ்.சேனநாயக்கவின் சிலைக்கு நினைவுக் குழுவின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜெயசூரிய உள்ளிட்ட விருந்தினர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அதுகோரல, முன்னாள் அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு, ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நினைவு நிகழ்வில் பிரசங்கத்தை கொள்ளுப்பிட்டி, பொல்வத்த, ஸ்ரீ தர்ம கீத்யாராமயத்தின் பீடாதிபதி கலாநிதி பண்டாரவளை விமலதம்ம தேரர் நிகழ்த்தினார்.

டி.எஸ்.சேனநாயக்க நினைவுக் குழு ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ விருந்தினர் உரையை நிகழ்த்தினார்.

### மட்டக்களப்பு–கொழும்பு

# புகையிரத சேவையில் மீண்டும் நேர மாற்றம்

■ வ.சக்தி

கிழக்கு மாகாண பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று, மட்டக்களப்பு - கொழும்புக்கு இடையிலான புகையிரத சேவை அட்டவணைகளில் மீண்டும் நேர மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மார்க்கத்திற்கான ரயில் சேவைகளில் தொடர்ச்சியாகக் காட்டு யானைகள் விபத்துக்குள்ளாகி வருவதைத் தடுக்கும் நோக்கில் கடந்த 7ஆம் திகதி முதல் நேர மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

காட்டு யானைகள் பாதுகாக்கப்படுகின்ற அதே வேளை கூடுதலான நேரம் இந்தப் பயணத்தின் போது காணப்படுகின்ற விடயங்களையும் பொதுமக்கள் முகங்கொடுத்த சிரமங்களையும் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரன் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, அடுத்து கிழக்கு மாகாண பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று மீண்டும் மட்டக்களப்பு கொழும்பு இடையிலான புகையிரத சேவை அட்டவணையில் மாற்றம்




செய்யப்பட்டுள்ளது.

இது திங்கட்கிழமை(24.03.2025) முதல் புதிய நேர அட்டவணையின் படி புகையிரத பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வகையில் அதிகாலை 01.30 இற்கு மட்டக்களப்பிலிருந்து புறப்படும் புலதிசி காலை 09.01மணிக்கு கொழும்பு கோட்டையைச் சென்றடையும்.

கொழும்பிலிருந்து மாலை 03.15 இற்கு புறப்படும் புலதிசி இரவு 10.38 மணிக்கு மட்டக்களப்பை வந்தடையும்.

இரவு 07.40 இற்கு மட்டக்களப்பிலிருந்து புறப்படும் மீனகயா அதிகாலை 04.16 மணிக்கு கொழும்பு சென்றடையும்.

இரவு 11.00 இற்கு கொழும்பிலிருந்து புறப்படும் மீனகயா காலை 06.45 மணிக்கு மட்டக்களப்பை வந்தடையும்.

காலை 06.10 இற்கு மட்டக்களப்பிலிருந்து புறப்படும் உதயதேவி மாலை 03.00 மணிக்கு கொழும்பு சென்றடையும்.

காலை 06.05 இற்கு கொழும்பிலிருந்து புறப்படும் உதயதேவி மாலை 03.00 மணிக்கு மட்டக்களப்பை வந்தடையும்.

புலதிசி, மீனகயா புகையிரதங்களில்

First class AC(AFC), Third class reserved (TCR) மாத்திரம் booking செய்து கொள்ள முடியும்.

உதயதேவி புகையிரதத்தில் 2nd class மாத்திரம் booking செய்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாகன விபத்து; ஐவர் காயம்




■ பாலித்த ஆரியவங்ச

பதுளை-பண்டாரவளை வீதியில் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ், தோவ ரஜ மகா விஹாரைக்கு அருகில் வைத்து முச்சக்கர வண்டி மற்றும் வேன் மீது மோதி ஞாயிற்றுக்கிழமை (23) மாலை விபத்துக்கு உள்ளானது.

அதில் காயமடைந்த ஐந்து பேர் பதுளை போதனா வைத்தியசாலையிலும், பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டியில் பயணித்த மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் காயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலைக்கும், பேருந்தில் பயணித்த மற்றொருவர் காயமடைந்து பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலைக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

## போதை விருந்து: 58 பேர் கைது



இன்ஸ்டாகிராம் சமூக ஊடகத்தை பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்ட விருந்து நிகழ்வில் பங்கேற்றிருந்த, 3 பெண்கள், ஹோட்டல் உரிமையாளர் அடங்களாக 57 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் 15 முதல் 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பமுனுகம பொலிஸார் தெரிவித்தனர்.

பமுனுகம, உஸ்வெட்டகொய்யாவ பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில், சட்டவிரோத விருந்துபசாரம் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெறுவதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து பொலிஸார், சோதனை நடத்தினர்.

இதன்போது, ஐஸ் மற்றும் கேரள கஞ்சா வைத்திருந்ததற்காக 16 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், மேலும், அங்கு இருந்த 07 பெண்களையும் 34 ஆண்களையும் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். 3 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஹோட்டலின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஹெரோயினுடன் இருவர் கைது



■ நிதர்ஷன் வினோத்,எஸ் தில்லைநாதன்


யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரண்டு இளைஞர்கள், ஞாயிற்றுக்கிழமை (23) அன்று கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மற்றும் யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் இணைந்து கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கைதான 22 மற்றும் 23 வயதான இளைஞர்களிடம் இருந்து 805 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

இரண்டு நபர்களையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தமிழில் பட்டம் பெற்ற பௌத்த தேரர்



யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 39 ஆவது பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை (21) இடம்பெற்றன. இதில், தமிழில் பட்டப்பின் டிப்ளோமாவைப் பயின்று சன்னாஸ்கம இந்திரானந்த தேரர் பட்டம் பெற்றுள்ளார்.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடாத்தப்பட்ட தமிழில் பட்டப்பின் தகைமைக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து அவர் இந்த பட்டம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவினால் சம்பிரதாய பூர்வமாக இவரது பட்டம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் லாப் கேஸுக்கு தட்டுப்பாடு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா மாவட்டம் முழுவதும் லாப் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால், நுகர்வோர் அவதிக்குள்ளாகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் பல மாதங்களாக நிலவும் லாப் எரிவாயு பற்றாக்குறையால் லாப் எரிவாயு நுகர்வோர் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் லாப் எரிவாயு நுகர்வோர் அதிக எண்ணிக்கையில் உள்ளனர், மேலும் மற்ற நிறுவனங்கள் லாப் எரிவாயு சிலிண்டர்களுக்கு வீட்டு எரிவாயு சிலிண்டர்களை வழங்காததால் எரிவாயு நுகர்வோர் துயரத்தில் ஆழ்ந்துள்ளார்.

லாப் எரிவாயு வாடிக்கையாளர்கள் மற்ற எரிவாயு முகவர்களிடமிருந்து புதிய எரிவாயு சிலிண்டரை வாங்கக் கோரிய போதிலும், நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு புதிய எரிவாயு சிலிண்டர்களை வழங்கப் போவதில்லை என்று



கூறியதாக வாடிக்கையாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பல லாப் எரிவாயு விற்பனை முகவர்களிடம் நாங்கள் விசாரித்தபோது, நிறுவனம் பல மாதங்களாக தங்கள் நிறுவனங்களுக்கு லாப் எரிவாயுவை வெளியிடாததால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

## தொடர்பு கொள்ளவும்

■ ஏ.எம்.ஜலீல்

மாத்தளை, உக்குவளை ஆகிய பிரதேசங்களிலுள்ள எழுத்தாளர்கள் கலைஞர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் மாத்தளையில் விரைவில் நடைபெறவுள்ளது

அகில இலங்கை எழுத்தாளர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் தேவஹுவ நிஜாமுதீனின் ஆலோசனையிலும் தலைமையிலும் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் முக்கிய பிரமுகர்கள் சிலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பிரதேசங்களின் எழுத்தாளர்கள், கலைஞர்கள் தமது துறைகளில் எதிர்நோக்கும் சங்கடங்களை இனம்கண்டு அவற்றை நிவர்த்தித்து அத்துறைகளினூடாக அவர்களை ஊக்குவித்து அத்துறைகளைக் கொண்ட கலை நிகழ்ச்சிகளை நடத்துவது பற்றியும் இதற்கமைய முதலாவது கலை நிகழ்ச்சியை மாத்தளையிலும் இரண்டாவது கண்டியிலும் நடாத்துவது பற்றியும் மேலும் இத்துறைகளில் தடம் பதித்தவர்கள் பற்றியும் கலந்துரையாடப் படவுள்ளன

எனவே? இதில் பங்குபற்ற விரும்பும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் தலைவர், அகில இலங்கை எழுத்தாளர்கள் சம்மேளனம்

4/9 , புலன்வெவ, தேவஹுவ கலேவெல என்ற முகவரியுடன்

தொடர்புகொண்டு தம்மைப் பதிவுசெய்துகொள்ளலாம் வளரும் இளம் எழுத்தாளர்கள், கலைஞர்களும் இதில் பங்குபற்றலாம்.

## சிரேஷ்ட ஊடகவியலாளர் காலமானார்

சிரேஷ்ட ஊடகவியலாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும், முன்னாள் பொதுச் செயலாளருமான தாஹா முஸம்மில் திங்கட்கிழமை (24) அதிகாலை காலமானார். அன்னாரது ஜனாஸா அஸர் தொழுகைக்குப் பிறகு மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.



## சிவனடிக்குச் சென்றவர் மரணம்

■ செ.தி.பெருமாள்

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற மொரட்டுவையைச் சேர்ந்த 62 வயதான அனுரகுமார பெர்ணாந்து, ஊசி மலையில் திடீரென நோய்வாய்ப்பட்டு ஞாயிற்றுக்கிழமை (23) உயிரிழந்துள்ளார்.

திடீரென சுகயீனமடைந்த அவரை, உறவினர்கள் நல்லத்தண்ணி நகருக்கு அழைத்து வந்து, அங்கிருந்து அம்பூலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டு வரும் வேளையில் உயிர் இழந்ததுள்ளார்

அவரது உடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் உள்ள சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற் கூற்று பரிசோதனை மேற்கொண்ட பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.

# ஜனாதிபதி அனுரவின் முதலடி, அரசியல்வாதிகளுக்கு தலையிடி

மக்களுக்கு சேவை செய்யும் நோக்குடன் அரசியலுக்குள் நுழையும் பலரும், கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு குறுகிய காலத்தில் உரிமையாளர்கள் ஆகிவிடுகின்றனர். மிக இலகுவாக, நிதியைக் கொள்ளையடித்து, இலஞ்ச, ஊழல் மோசடிகளில் ஈடுபட்டே சொத்துக்களைச் சேர்த்துக் கொள்கின்றனர். இவையெல்லாம், ஜனாதிபதி அனுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறியதன் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அம்பலத்துக்கு வந்து கொண்டிருக்கிறது.

மக்களின் வாக்குகளால், மக்களுக்கு சேவை செய்வதற்குப் பாராளுமன்றம், மாகாண சபை (தற்போது இயங்கவில்லை) உள்ளூராட்சி மன்றங்களுக்கு வருவோரில் பலரும் சுகபோகமான வாழ்க்கையை அனுபவித்து வந்துள்ளனர் என்பது உண்மையாக இருக்கிறது. எனினும், அவ்வாறான கனவு எதிர்காலத்தில் பலிக்காது என்பது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க எடுத்து வைத்துள்ள முதலாவது அடியிலேயே புரிகின்றது.

முந்தைய அரசாங்கங்களில், பாராளுமன்ற உறுப்பினர், பிரதியமைச்சர் அல்லது அமைச்சரானார், அவர், பாராளுமன்ற உறுப்பினரின் ஓய்வூதியத்தையும், ஜனாதிபதி ஆகிவிட்டால், அவர், பாராளுமன்ற உறுப்பினரின் ஓய்வூதியத்தையும் சேர்த்தே பெற்றுக் கொள்கிறார் என அம்பலப்படுத்திய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தன்னுடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கான ஓய்வூதியத்தை வேண்டாமென எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்.

ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை ஆட்சி மாறும் போது, அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுக்கும் வகையில், கட்சி மாறி, சுகபோகங்களை அனுபவித்து வந்துள்ளனர். இந்நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளை அவதானிக்கும் போது, முன்மாதிரியானதாய் உள்ளது.

எவ்வாறெனினும், ஆட்சிப்பீடத்தை கைப்பற்றி அதில் குளிர் காய்வதற்கு முயற்சிக்கும் பலரும், அரசாங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மிகக் குறுகிய காலத்திலேயே முன்வைக்கின்றனர். ஆகையால், மக்களின் மனங்களைக் கவரும் வேலைத்திட்டங்களை அதிரடியாக முன்னெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

கடந்தகால ஆட்சிகளின் போது இடம்பெற்ற, ஊழல்,மோசடி, சொத்துக்குவிப்பு உள்ளிட்டவை அம்பலப்படுத்தும் அதேநேரத்தில், நாட்டின் முன்னேற்றத்திற்காக முன்வைத்துள்ள யோசனைகளை அமல்படுத்த வேண்டும். இல்லையேல், மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கு, நம்பிக்கை உள்ளிட்டவை குறையும். இதுவே, பிரச்சினையாகிவிடும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர், தங்களுக்குரிய மாதாந்த சம்பளம் எவ்வளவு என்று தெரியாமலே பல வருடங்களாக இருந்துள்ளனர். அதாவது, மாத சம்பளத்தை அவர்கள், வங்கிகளில் இருந்து எடுக்கவே இல்லையெனக் குற்றஞ்சாட்டிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியமும் ரத்து செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் மக்களுக்கு சேவையை செய்ய வேண்டும். அவர்கள் கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருக்க முடியாது. களத்துக்குச் செல்ல வேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார். தேர்தல்கள் காலங்களில் மட்டுமே, வாக்காளர்களைத் தேடிச்செல்லாது. மக்களுக்கு சேவைகளை செய்யும் அரசியல்வாதிகள் மட்டுமே மக்களின் மனங்களில் நீண்ட காலம் நிலைத்து நிற்பார்கள்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எந்தப் போராட்டமும் உடனடியாக வெற்றிபெறுவதில்லை. அதர்மம் செய்பவர்கள் நீதியுடன் போராட முயல்கின்றனர். தியாகம் இன்றி நல்ல காரியங்கள் நடப்பதில்லை.

அடுத்தடுத்து வரும் தோல்விகளே மன உறுதியை வளர்க்கும். உரிமைகளுக்காகப் பல வருடங்களாகப் போராட்டங்கள் நடந்ததை நாம் அறிவோம்.

அடக்குமுறைகள் நீதிக்குப் புறம்பானது என சர்வதிகாரிகளுக்குத் தெரியும். பதவி மோகம் அறிவைத் தடுக்கும். நிராயுதபாணிகளை அடக்குவது, கேவலமான செயல்.

நாகரிகமான உலகிலும் கேவலமான காரியங்கள் நடந்தபடிதான் உள்ளன. ஆனால், காலங்காலமாக இதுவும் நடந்தபடியேதான் உள்ளன.

நீதிக்கு எதிராக அநீதியின் மூர்க்கத்தனம் நிரந்தமைனதும் அல்ல; மக்கள் பேரெழுச்சி சமானியமானது அல்ல! மக்கள் நிம்மதியாக வாழமுடியாது எனும் அளவுக்கு நிலைமை வந்தால் நாட்டை விட்டு ஓடுகின்ற எண்ணங்களே உருவாகும். அரசுகள் இதை உணர வேண்டும். பேதமற்றவர்களே ஆட்சிக்கு உகந்தவர்கள்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

### வாக்குகளைப் போல

# அதிகளவில் நிராகரிக்கப்படும் வேட்பு மனுக்கள்

மொஹமட் பாதுஷா

**இலங்கையில் தேர்தல்கள் இடம்பெறுகின்ற போது கணிசமான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதையும், அரச ஊழியர்களின் தபால் மூல வாக்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதையும், மக்களால் அளிக்கப்படுகின்ற இலட்சக்கணக்கான வாக்குகள் செல்லுபடியற்றதாக ஆகிவிடுவதையும் தொடர்ச்சியாக கண்டு வருகின்றோம்.**

இந்த நிராகரிப்புகள், சம்பந்தப்பட்ட தரப்பினரை ஜனநாயக செயன்முறையான குறிப்பிட்ட தேர்தலில் செல்வாக்குச் செலுத்த முடியாதவர்களாக ஆக்கி விடுகின்றது. படிப்பறிவும் எழுத்தறியும் உயர்ந்த மட்டத்தில் உள்ள மக்கள் வாழ்கின்ற நாடொன்றில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறுகின்றமை சர்வ சாதாரணமாகக் கடந்து போகக் கூடிய விடயமல்ல.

அந்த வகையில், 2025 மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதன் பிரதான கட்டம் முடிவுக்கு வந்து விட்டது. அங்கீகரிக்கப்பட்ட பெரிய, சிறிய அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, ஏகப்பட்ட சுயேச்சை குழுக்களும் திடீரென உருவாகி., இத் தேர்தலில் களமிறங்கியுள்ளன.

ஆனால், வடக்கு, கிழக்கு, கொழும்பு உட்பட நாட்டின் எல்லா தேர்தல் மாவட்டங்களிலும் கணிசமான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட சுமார் 400 இற்கும் மேற்பட்ட வேட்புமனுக்கள் இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு அதிக எண்ணிக்கையில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளமை ஒரு பேசுபொருளாகியுள்ளது. குறிப்பாக, 'சிறிய காரணங்களுக்காக' இவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் இதற்குப் பின்னால் வேறு ஏதாவது அரசியல் நோக்கங்கள் இருக்குமா என்றும் சம்பந்தப்பட்ட கட்சிகள் சொல்லுமளவுக்கு நிலைமைகள் சென்றுள்ளதை காண முடிகின்றது.

குறிப்பாக, வட மாகாணம் மற்றும் அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டம் போன்ற இடங்களில் தாக்கல் செய்யப்பட்ட சில வேட்புமனுக்கள் 18-35 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களின் பிறப்புச் சான்றிதழ் பிரதிகள் தொடர்பான காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட கட்சிகள் கூறியுள்ளன.

இவ்வாறு சிறிய காரணங்களுக்காக தங்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டதையடுத்து பல தமிழ், முஸ்லிம் கட்சிகள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளன. அதனடிப்படையில் தமது பக்கத்தில் நியாயமுள்ளது எனக் கருதும் கட்சிகள் இவ்வாரம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முஸ்தீபுகளைச் செய்து வருகின்றன.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள தேர்தல்கள் ஆணையாளர், வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் குழுவினால் அவை நிராகரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்கள் எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்படும் என்று கூறியுள்ளார். அதாவது, மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் சட்ட விதிகள், சுற்று நிருபங்களுக்கு அமைவாகவே மனுக்களை நிராகரித்துள்ளதாக அவர் மறைமுகமாகக் கூறியுள்ளார்.

ஆனால், கட்சிகளின் வேட்புமனுக்களும் தேர்தலின் போது, மக்கள் அளிக்கப்படுகின்ற வாக்குகளும் அதிகளவில் நிராகரிக்கப்படுகின்ற போக்கில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டிய கூட்டுப் பொறுப்பு எல்லோருக்கும் உள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 667 ஆயிரத்திற்கு அதிகமான வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இலற்றுள் தபால்மூலம் வாக்களித்த அரச ஊழியர்களின் வாக்குகளும் அடங்குகின்றன. 93 சதவீதம் எழுத்தறிவு கொண்ட நாடு என நாம் மார்தட்டிக் கொள்கின்ற சூழலில் இலட்சக்கணக்கான வாக்குகள் நிராகரிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.

இதற்குப் பிரதான காரணம், வாக்களிப்பு தொடர்பாக எல்லா மட்டங்களிலும் உள்ள பொது மக்களுக்கு போதுமான விளக்கம் இல்லாமை ஆகும். முன்னைய காலங்களில் படிப்பறிவு வீதம், ஊடகங்கள் குறைவாக இருந்தாலும், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களை மக்கள் உன்னிப்பாகக் கவனிக்கின்ற தன்மை இருந்தது.

தேர்தல்கள் திணைக்களம் மட்டுமன்றி, வேட்பாளர்களும் மக்களுக்கு வாக்களிப்பது பற்றி அறிவூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். ஆனால், நவீன ஊடகங்களும் அதனால் ஏகப்பட்ட கவனச் சிதறல்களும் ஏற்பட்டுள்ள இக் காலகட்டத்தில் போதுமானளவுக்கு மக்கள் தெளிவுபடுத்தப்படுவதில்லை என்றே கூற வேண்டியுள்ளது.

இந்தக் காரணத்தினாலும், நீளமான வாக்குச் சீட்டு, பொறுப்பற்ற வாக்களிப்பு போன்ற இன்னபிற காரணங்காலும் இலட்சக்கணக்கான வாக்குக்குள் நிராகரிக்கப்படுகின்றன. இதனை மாற்றியமைக்க வேண்டுயம். குறிப்பாக அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் செல்லுபடியாகும் தன்மையுடன் வாக்களிப்பது அவசியம்.

மறுபுறத்தில், கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்குப் பல காரணங்களைக் கூறலாம். தேர்தல்கள் திணைக்களம் வழங்குகின்ற அறிவுறுத்தல்களை முறையாக வாசித்து விளங்கிக் கொள்ளாமை இத்தேர்தல் முக்கியமானதாகும். கட்சிகளில் இவ்விடயத்தில் அனுபவ அறிவுள்ளவர்கள் குறைந்து போவதும் காரணமாகின்றது.

அரசியல் கட்சிகள் தமக்கு இவ்விடயத்தில் அனுபவம் உள்ளதுதானே என்ற அசட்டுத் துணிச்சலில் சில அறிவுறுத்தல்களைப் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை அல்லது கூர்ந்து நோக்குவதில்லை என்றே கூறலாம். கடைசிக் கட்டத்தில் வெளியிடப்படுகின்ற சுற்று நிருபங்கள், கட்சிகள், சுயேச்சை குழுக்களைச் சென்றடையாமல் விடுவதும் உண்டு.

இன்னும் ஒரு முக்கிய காரணமும் இருக்கின்றது. அதாவது, கட்சிகள் அதிலும் குறிப்பாக முஸ்லிம் கட்சிகள் கடைசித் தருணம் வரைக்கும் குறிப்பிட்ட பிரதேசத்தின், மாவட்டத்தின் வேட்பாளர்கள் யாரென்ற இறுதி முடிவை எடுக்காமல் இருப்பதுண்டு.

வெட்டுக்குத்துக்கள், இழுபறிகள் எல்லாம் முடிவுக்கு வந்து, வேட்பு மனுத்தாக்கல் செய்யும் தினம் விடிகாலையில்தான் வேட்பாளர்களின் பெயர், விபரங்கள் இற்றைப்படுத்தப்படும் பட்சத்தில், அவசர அவசரமாகப் படிவங்கள் நிரப்பப்படுகின்றன. அப்போது உரிய ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு இணைக்கப்படுவதில்லை.

எது எவ்வாறிருப்பினும், நீண்டகாலம் அரசியல் அனுபவம் கொண்ட தமிழ், முஸ்லிம் கட்சிகள் வேட்பு மனுக்களை சரிவர பூரணப்படுத்தி உரிய முறைப்படி சமர்ப்பிக்கத் தவறுவது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும்.

ஏனென்றால், ஒரு கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்படும் போது, அக்கட்சி சார்ந்த வாக்காளர்களின் முடிவிலும் அது தாக்கம் செலுத்துகின்றது என்பதை மறந்து விடக் கூடாது. எனவே, இதற்குத் தீர்வு காண வேண்டும்.

ஒரு கட்சி என்றால், தேர்தல் விதிமுறைகளைத் திருப்திப்படுத்தும் வகையில் சமர்ப்பித்தேயாக வேண்டும். முறைப்படி ஆவணங்களைக் கூட சமர்ப்பிக்க முடியாத கட்சி ஒன்று எப்படி மற்ற விடயங்களைக் கன கச்சிதமாகக் கையாளப் போகின்றது?

ஆனால், மறுபுறத்தில், இரகசியமான அல்லது பகிரங்கமாக அறிவிக்கப்படாத விதிமுறைகள் அடிப்படையாகக் கொண்டு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தால், அல்லது இப்போது பல சிறுபான்மைக் கட்சிகள் அபிப்ராயப்படுவது போல, இதற்குப் பின்னால் சில கட்சிகளை மழுங்கடிக்கும் உள்நோக்கங்கள் ஏதுமிருப்பின், அக்கட்சிகள் நீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

## கடிதங்கள்

### இரண்டு மாத மின் கட்டணம்; மக்கள் பாதிப்பு



ஹட்டன் மின்சார வாடிக்கையாளர் சேவை மையத்தால் நிர்வகிக்கப்படும் ஹட்டன் ருவன்புர கொலனியில், கடந்த இரண்டு மாதங்களுக்கான மின் கட்டணங்களைச் சனிக்கிழமை(22) அன்று வழங்கியமையால் வாடிக்கையாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அப்பகுதி மக்களுக்கு, கடைசியாக 25.01.2025 அன்று மின் கட்டணம் வழங்கப்பட்டுள்ளதுடன் , அதன் பின்னர் மார்ச் 22 (சனிக்கிழமை) ஆம் திகதி இரண்டு மாதங்களுக்குரிய மின் கட்டணம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மின் கட்டணம் வழங்குபவரிடம் விசாரித்த போது அதற்குப் பதிலளிக்கும் வகையில், ருவன்புர கொலனிக்கு மாதாந்தம் மின் கட்டணங்களை வழங்கியவருக்கு ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக, கினிகத்தேனை பிராந்திய மின் பொறியியல் அலுவலகம் இந்த பகுதியில் மின் கட்டணங்களை வழங்கும் பொறுப்பை தனக்கு வழங்கியுள்ளதாக மாத்திரம் கூறியுள்ளார்.

மின் கட்டணத்தைச் செலுத்தத் தவறினால், தங்கள் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் துண்டிக்கப்படும் எனவும் , விவசாயம் மற்றும் கூலி வேலைகளில் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கையை நடத்தும் நிலையில் இவ்வாறு, இரண்டு மாதங்களுக்கான மின்சார கட்டணத்தை உடனடியாக செலுத்த முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தி நிவாரணம் வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- ரஞ்சித் ராஜபக்ஷ



# அறநெறிப் பாடசாலை ஆரம்பம்

திருகோணமலை – இலிங்கநகர் பாலமுருகன் ஆலயத்தில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஆலய பரிபாலன சபையின் தலைமையின் கீழ் ஞாயிற்றுக்கிழமை (23) காலை தலைவர், செயலாளர், உறுப்பினர்களின் பங்குபற்றலுடனும் பிரதம குரு சிவ பிரம்மஸ்ரீ ந.ஷண்முக சிவா சர்மாவின் ஆசியுடனும் அறநெறி செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளது.
இதன்போது மாணவர்களின் அறநெறி வளர்ச்சிக்காக V.கருணாகரன், ரூபாய் 20000.00 தலைவர் பொ.சற்சிவானந்தனிடம் வழங்கியுள்ளார்.

– அ.அச்சுதன்







# இலவச மருத்துவ பரிசோதனை முகாம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் 10 பிரதேச செயலகப் பிரிவுகளில், பாடசாலை செல்லாத 154 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்பட்டுள்ளது.
கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை இந்த இலவச மருத்துவ முகாம்கள் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், ஆரையம்பதி, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி, மகிழடித்தீவு ஆகிய இடங்களில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் இடம்பெற்றது.
கொழும்பைச் சேர்ந்த ஆறு பேரடங்கிய வைத்திய நிபுணர் குழுவுடன், புகழ்பெற்ற குழந்தை சுகாதார மருத்துவ நிபுணரான டாக்டர் நதி நிசன்சலா பீரிஸ் தலைமையில் இந்த இலவச வைத்திய பரிசோதனை செயல்முறை நடைபெற்றுள்ளது.

– ஏ.எச்.ஏ.ஹுஸைன்

# நூல் அறிமுக நிகழ்வு

தமிழ்நிதி அருணா செல்லத்துரை இலிங்க பூமியிலிருந்து எழுதிய இராவணனார் தெய்வீக மானிடர் லங்கா பாங்கு வரலாறு நூல் அறிமுக நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (22) பிற்பகல் மன்னார் மாவட்டச் செயலக மருதம் மாநாட்டு மண்டபத்தில் மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) – மா. ஸ்ரீஸ்கந்தகுமார் தலையில் இடம் பெற்றது.
இந் நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய தலைவர் ,மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் சட்டத்தரணிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

– எஸ்.ஆர்.லெம்பேட்













# ‘கலாசார சங்கமம் நிகழ்வு - 2025’



‘ஓரங்கட்டப்பட்டு மருவி வரும் கலைஞர்களை வெளிக்கொணரும் ‘எங்கள் குரல்’ எனும் தொனிப் பொருளில் மன்னார் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்த ‘கலாசார சங்கமம் நிகழ்வு–2025’ மன்னார் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் மன்னார் மாவட்ட சிரேஷ்ட திட்ட அலுவலர் ஜெபநாதன் டலிமா தலைமையில் சனிக்கிழமை(22) காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.
அருகி வரும் கலைகள் மற்றும், ஓரங்கட்டப்பட்டு வருகின்ற சிறுவர்கள் மற்றும் அவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் வகையிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் குறித்த நிகழ்வு இடம்பெற்றதுடன் இந்நிகழ்வில் தேசிய கலைஞர் எஸ்.ஏ.உதயன் கலந்து கொண்டார்.


– எஸ்.ஆர்.லெம்பேட்



# மாணவர்கள் கௌரவிப்பு

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற, வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமை (23) அன்று சென். பிலிப் நேரிஸ் ஆலய வாராந்த திருப்பலியின் போது கௌரவிக்கப்பட்டனர்.
செம்பியன்பற்று கடற்றொழிலாளர் சங்கத்தின் நிதி அனுசரணையில் ஆலய அருட்சகோதரியால் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

– எஸ்.தில்லைநாதன்



# சமந்தாவின் முயற்சி

நடிகர் விஜய் படப்பிடிப்பு நடக்கும் இடத்தில், ரசிகர்கள் கூட்டத்தினரை திருப்தி செய்வதற்காக, அவர்களுடன் சேர்ந்து செல்பி புகைப்படம் அல்லது வீடியோ எடுத்து தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்வார். குறிப்பாக, அவர் நெய்வேலியில் எடுத்த செல்பி பார்வையாளர்கள் எண்ணிக்கையில் சாதனை செய்தது.

இந்த நிலையில், அண்மையில் நடிகை சமந்தா ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகருக்கு ஒரு நிகழ்ச்சிக்காக சென்றிருந்த போது, அங்கு கூடியிருந்த ரசிகர்களை திருப்தி செய்யும் வகையில் செல்பி வீடியோ எடுத்துள்ளார்.

அந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வரும் நிலையில், பலர் “விஜய் போலவே சமந்தாவும் செல்பி வீடியோவை முயற்சித்துள்ளார்” என்று பதிவு செய்து வருகின்றனர்.



# ஒரே காரில் மனைவியுடன் வந்து விவாகரத்து கோரிய ஜி.வி.

தமிழ் சினிமாவில் முன்னணி இசையமைப்பாளர் மற்றும் நடிகரான ஜி.வி.பிரகாஷ் குமார் கடந்த 2013ஆம் ஆண்டு பின்னணிப் பாடகி சைந்தவியை திருமணம் செய்து கொண்டார்.

இவர்களுக்கு அன்வி என்ற மகள் உள்ளதுடன், கடந்த 12 வருடங்களாக ஒன்றாக இருந்த இருவரும் அண்மையில் பிரிவதாகத் தெரிவித்தனர்.

இந்நிலையில், நேற்று ஒரே காரில் இருவரும் சென்னை குடும்ப நல நீதிமன்றத்துக்கு வந்து பரஸ்பர விவாகரத்து கோரி மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த மனு சென்னை முதலாவது கூடுதல் குடும்ப நல நீதிமன்ற நீதிபதி செல்வ சுந்தரி முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது ஜி.வி. பிரகாஷ், சைந்தவி, இருவரும் நேரில் ஆஜராகி, இருவரும் மனமுவந்து பிரிவதாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இந்த வழக்கு விசாரணையை நீதிபதி ஒத்திவைத்தார். பின்னர் இருவரும் ஒரே காரில் புறப்பட்டுச் சென்றனர்.

# ‘கஜினி 2’



‘கஜினி’ படத்தின் இரண்டாம் பாகமும் உருவாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கஜினி படம் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் 2005ஆம் ஆண்டு வெளியாகி வசூல் சாதனை நிகழ்த்தியது. இதில் சூர்யா, நயன்தாரா, அசின், பிரதீப் ராவத், ரியாஸ்கான் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர்.

நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற ஏ.ஆர்.முருகதாஸ் கூறுகையில்,

“கஜினி 2ஆம் பாகம் குறித்து எனக்கு சில யோசனைகள் உள்ளன.

தெலுங்கு தயாரிப்பாளர் அல்லு அரவிந்த் கஜினி 2ஆம் பாகத்தை உருவாக்கத் தீவிரமாக இருக்கிறார்.

கஜினி 2 படத்தை ஒரே நேரத்தில் தமிழ், இந்தியில் உருவாக்குவோம். பேச்சுவார்த்தை நடக்கிறது” என்றார்.



# உலகநாயகன் வைத்த பெயர்

நடிகர் ரோபோ சங்கருக்கு அண்மையில் பேரன் பிறந்த நிலையில், அந்த குழந்தைக்கு உலகநாயகன் கமல்ஹாசன் பெயர் வைத்துள்ளார்.

ரோபோ சங்கரின் மகள் இந்திரஜா, கார்த்திக் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இந்த திருமணம் மிகவும் பிரமாண்டமாக நடந்தது. சில மாதங்களில் கர்ப்பமான இந்திராஜா, ஆண் குழந்தை பிறந்ததாக அறிவித்தார்.

இந்த நிலையில், இந்திராஜா - கார்த்திக் குழந்தைக்கு உலகநாயகன் கமல்ஹாசன், ‘நட்சத்திரன்’ என்று பெயர் வைத்துள்ளார். இந்த தகவலைக் கேட்ட ரசிகர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

மேலும், கமல்ஹாசனுடன் குழந்தைக்குப் பெயர் வைக்கும் புகைப்படத்தை இந்திரஜா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ள நிலையில், அந்த புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.



# மீண்டும் வில்லனாக விஜய் சேதுபதி



நடிகர் விஜய் சேதுபதி ஏற்கெனவே சில மாஸ் நடிகர்களின் படங்களில் வில்லனாக நடித்த நிலையில், இனிமேல் வில்லனாக நடிக்கப் போவதில்லை என தெரிவித்திருந்தார்.

எனினும், தற்போது முக்கிய நடிகரின் அடுத்த படத்தில் விஜய் சேதுபதி வில்லனாக நடிக்கப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகத் தகவல் வெளியாகி உள்ளது. சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த ‘பேட்ட’, தளபதி விஜய் நடித்த ‘மாஸ்டர்’, உலகநாயகன் கமல்ஹாசன் நடித்த “விக்ரம்” உள்ளிட்ட படங்களில் விஜய் சேதுபதி வில்லனாக நடித்துள்ளார்.

அதுபோல், பொலிவூட்டிலும் அட்லி இயக்கத்தில் ஷாருக்கான் நடித்த ‘ஜவான்’ படத்திலும் வில்லனாக நடித்துக் கலக்கியிருந்தார். ஆனால் ’மஹாராஜா’ படத்தின் வெற்றிக்குப் பின்னர், இனிமேல் அவர் வில்லனாக நடிக்க மாட்டார் என்று கூறப்பட்டது.

ஆனால், தற்போது நடிகர் பிரபாஸ் நடிக்கும் “ஸ்பிரிட்” என்ற திரைப்படத்தில் வில்லனாக நடிக்க விஜய் சேதுபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த படத்தின் இயக்குநர் சந்தீப் ரெட்டி, விஜய் சேதுபதியைச் சந்தித்து இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், விரைவில் இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தான்

## தட்டம்மை பாதிப்புக்குள்ளாகி

# 17 சிறுவர்கள் பலி



பாகிஸ்தானின் சிந்து மாவட்டத்தில், கடந்த 2 மாதங்களில் தட்டம்மை பாதிப்புக்குள்ளாகி, 17 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில், கடந்த ஜனவரி 1ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை, தட்டம்மை பாதிப்பு பற்றி சிந்து சுகாதாரத் துறை கணக்கெடுப்பு ஒன்றை நடத்தியது.

இதில், 1,100க்கும் மேற்பட்டோர் பாதிப்புக்கு ஆளானது தெரியவந்தது. இதில், அதிக அளவாக காயிர்பூர் மாவட்டத்தில் 10 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கராச்சியில், கடந்த 2 மாதங்களில் மொத்தம் 550 சிறுவர்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். கராச்சியின் கிழக்கு மாவட்டத்தில் 5 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

சுக்கூர் மற்றும் ஜகோபாபாத் மாவட்டங்களில் தலா ஒரு சிறுவர்கள் என பாகிஸ்தானில் 17 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதுபற்றி வைத்தியர்கள் கூறும்போது,

“பாதிப்பு பற்றிய விழிப்புணர்வு பற்றாக்குறை மற்றும் தடுப்பூசி போடாமல் இருப்பது ஆகியவை சிறுவர்களின் மரணங்களுக்கான முக்கிய காரணங்கள் ஆகும்,” என கூறினர்.

காசா

## வைத்தியசாலையை தாக்கிய இஸ்ரேல்

# ஹமாஸ் அமைப்பின் தலைவர் பலி

தெற்கு காசாவில் அமைந்துள்ள வைத்தியசாலையை, ஞாயிற்றுக்கிழமை (23) அன்று இஸ்ரேல் குறிவைத்து நடத்திய தாக்குதலில், ஹமாஸ் அமைப்பின் தலைவர் மற்றும் 16 வயது சிறுவன் ஆகியோர் கொல்லப்பட்டனர். இதனை ஹமாஸ் அமைப்பு மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஹமாஸ் அரசியல் அமைப்பைச் சேர்ந்த இஸ்மாயில் பர்ஹோம் நாசர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழந்ததாக, ஹமாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியசாலையில், ஹமாஸ் ஆயுதக்குழுவை சேர்ந்தவர்கள் பதுங்கி இருந்ததாகவும், அவர்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் உயிரிழப்புக்கு ஹமாஸ் அமைப்பினரே காரணம் எனவும், மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளில் அவர்கள் இயங்கி வருவதால் தாக்குதலின்போது, அதிக உயிரிழப்புகள் ஏற்படுவதாகவும் இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது.



இத்தாலி

## திருமணம் ஆகாதவர்களும்

# குழந்தைகளை தத்தெடுக்க அனுமதி



இத்தாலியில், திருமணம் ஆகாதவர்களும் வெளிநாட்டுக் குழந்தைகளைத் தத்தெடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் 1983ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சர்வதேச தத்தெடுப்புச் சட்டத்தின்படி, திருமணமான தம்பதியர் மட்டுமே வெளிநாட்டுக் குழந்தையைத் தத்தெடுக்க முடியும். மற்றவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு இருந்தது. இதனை எதிர்த்து குழந்தை தத்தெடுப்புக்கான இத்தாலிய சங்கம், நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது.

இந்த வழக்கின் விசாரணை நிறைவடைந்த நிலையில், நீதிமன்றம் தற்போது அதிரடி தீர்ப்பு வழங்கியது.

அதாவது வெளிநாட்டுக் குழந்தைகளைத் தத்தெடுப்பது வெகுவாக குறைந்து வருகிறது. இது குடும்பச் சூழலில் வளர்வதற்கான குழந்தைகளின் உரிமையை மறுப்பதாக உள்ளது.

எனவே 40 ஆண்டுகளுக்கு முந்தைய சர்வதேச தத்தெடுப்புச் சட்டத்தை இரத்து செய்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனால் திருமணம் ஆகாதவர்களும் இனிமேல் வெளிநாட்டுக் குழந்தைகளைத் தத்தெடுக்க முடியும்.

தமிழகம்

## போராட்டம் நடத்திய தமிழக

# விவசாயிகள் 40 பேர் கைது

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரைப்படி வேளாண் விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யாத மத்திய அரசைக் கண்டித்து சென்னையில் ரயில் மறியல் போராட்டம் நடத்திய தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் 40 பேர் கைது செய்யப்பட்டனர்.

பஞ்சாபில் போராட்டம் நடத்திய விவசாயிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து சென்னை, உசிலம்பட்டி, மயிலாடுதுறை, திருப்பூரில் மார்ச் 23ஆம் திகதி, ரயில் மறியல் போராட்டம் நடைபெறும் என்று, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் அறிவித்தது. அதன்படி, சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் மறியல் போராட்டம் நடத்துவதற்காகத் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிறுவனர் வழக்கறிஞர் ஈசன் முருகசாமி தலைமையில் விவசாயிகள் வந்தனர். பொலிஸார் தடுத்து நிறுத்தியதையும் மீறி, ரயில் நிலையத்துக்குள் சென்று மறியலில் ஈடுபட முயன்றதால் 40 விவசாயிகளும் கைது செய்யப்பட்டனர்.




புதுடெல்லி

# 357 விளையாட்டு இணையதளங்களுக்கு தடை

இந்தியாவில், சட்டவிரோதமாக இயங்கி வரும் 357 விளையாட்டு இணையதளங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளைச் சேர்ந்த இணையவழி விளையாட்டு இணையதளங்கள் இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் ஒரு இணையதளங்கள் ஜிஎஸ்டியை பதிவு செய்யத் தவறியதன் மூலம், வரி செலுத்த வேண்டிய தொகைகளை மறைத்து, வரிக் கடமைகளைத் தவிர்த்து வருகின்றன.



அத்தகைய இணையதளங்களுக்கு எதிரான நடவடிக்கையை ஜிஎஸ்டி புலனாய்வு இயக்குனரம் தீவிரப்படுத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக இந்தியாவில் சட்டவிரோதமாக இயங்கி வரும் 357 வெளிநாட்டு விளையாட்டு இணையதளங்களுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

மேலும் சட்டவிரோத விளையாட்டு இணையதளங்களுடன் இணைக்கப்பட்ட 2,400 வங்கிக் கணக்குகளையும் அரசு முடக்கியுள்ளது.

இதன் மூலம் ரூ.126 கோடி முடக்கப்பட்டுள்ளது.



## தேசங்களுக்கான லீக் தொடர்

# அரையிறுதியில் பிரான்ஸ், ஸ்பெய்ன், ஜேர்மனி

தேசங்களுக்கான லீக் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு பிரான்ஸ், நடப்புச் சம்பியன்களான ஸ்பெய்ன், ஜேர்மனி, போர்த்துக்கல் ஆகியன தகுதி பெற்றுள்ளன.

குரோஷியாவுடனான காலிறுதிப் போட்டியில் பெனால்டியில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு பிரான்ஸ் தகுதி பெற்றுள்ளது.

குரோஷியாவில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்ற பிரான்ஸ், தம்நாட்டில் திங்கட்கிழமை (24) அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் மேலதிக நேர முடிவிலும் 2-0 என்ற கோல் கணக்கில் வென்று 2-2 என்ற மொத்த கோல் கணக்கில் சமநிலையில் காணப்பட்டது. பிரான்ஸ் சார்பாக மிஷெல் ஒலிஸே, உஸ்மான் டெம்பிலி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், பெனால்டியில் பிரான்ஸின் தியோ ஹெர்ணாண்டஸும், ஜூலேஸ் கூன்டேயும் கோல் கம்பத்துக்குள் வெளியால் தமதுதைகளைச் செலுத்திய நிலையில், குரோஷியாவின் மார்டின் படுரினா, ஜோசிப் ஸ்டனிசிச்சின் உதைகளை பிரான்ஸின் கோல் காப்பாளர் மைக் மைக்னன் தடுத்ததோடு, பிராஞ்சோ இவனோவிச் தனதுதையை கோல் கம்பத்துக்குள் மேலால் செலுத்த 5-4 என்ற ரீதியில் வென்றே பிரான்ஸ் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை நெதர்லாந்தை தமது காலிறுதிப் போட்டியில் எதிர்கொண்ட ஸ்பெய்னும் பெனால்டியில் 5-4 என்ற ரீதியில் வென்றே அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது. நெதர்லாந்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய ஸ்பெய்ன், தம்நாட்டில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியையும் 3-3 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியிருந்தது. பெனால்டியில் நெதர்லாந்தின் நோவா லாங்கின் உதையானது கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பியதுடன், ஸ்பெய்னின் லமீன் யமாலின் உதையை நெதர்லாந்தின் கோல் காப்பாளர் பார்ட் வெர்புரூக்கன் தடுத்திருந்தார். பின்னர் நெதர்லாந்தின் டொன்யெல் மலெனின் உதையை ஸ்பெய்னின் கோல் காப்பாளர் உனய் சிமியோன் தடுத்த நிலையிலேயே ஸ்பெய்ன் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்நிலையில் இத்தாலியில் நடைபெற்ற முதலாவது சுற்று காலிறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்ற ஜேர்மனி, தம்நாட்டில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியபோதும் 5-4 என்ற மொத்த கோல் கணக்கில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதுதவிர, டென்மார்க்கில் நடைபெற்ற அந்நாட்டுடனான முதலாவது சுற்று காலிறுதிப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்ற போர்த்துக்கல், தம்நாட்டில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 5-2 என்ற கோல் கணக்கில் வென்று, 5-3 என்ற மொத்த கோல் கணக்கில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

## ஐ.பி.எல்.

# மும்பையை வென்ற சென்னை



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), சென்னையில் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சென்னை

மும்பை: 155/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: திலக் வர்மா 31 (25), சூரியகுமார் யாதவ் 29 (26), தீபக் சஹர் ஆ.இ 28 (15), நாமன் திர் 17 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: நூர் அஹ்மட் 4/18 [4], கலீல் அஹ்மட் 3/29 [4], இரவிச்சந்திரன் அஷ்வின் 1/31 [4], இரவீந்திர ஜடேஜா 0/21 [3])

சென்னை: 158/6 (19.1 ஓவ.) (துடுப்பாட்டம்: றஷின் ரவீந்திர ஆ.இ 65 (45), ருத்துராஜ் கைகவாட் 53 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: விக்னேஷ் புதுர் 3/32 [4], வில் ஜக்ஸ் 1/32 [4], நாமன் திர் 0/12 [3])

போட்டியின் நாயகன்: நூர் அஹ்மட்

முன்னதாக ஹைதரபாத்தில் நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றிருந்தது.

இந்நிலையில், அஹமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸை குஜராத் டைட்டான்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## ஐ.பி.எல்:
## பெருவிரல் காயத்தால்

# மாயங்க் யாதவ்வின் மீள் வருகையில் பின்னடைவு



இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸின் வேகப்பந்துவீச்சாளரான மாயங்க் யாதவ் முதுகுப் பகுதி காயமொன்றிலிருந்து குணமடைந்து வருவதானது புதிய பெருவிரல் காயமொன்றால் பின்னடைவைச் சந்தித்துள்ளது.


எவ்வாறாயினும் ஐ.பி.எல் 2025-இன் பிற்பகுதியில் மாயங்க் விளையாடுவாரரென சுப்பர் ஜையன்ட்ஸின் தலைமைப் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுப்பர் ஜையன்ட்ஸின் முதற் தெரிவு இந்திய வேகப்பந்துவீச்சாளர்களான மாயங்க், மொஷின் கான், ஆவேஷ் கான், ஆகாஷ் டீப் என நால்வருமே காயமடைந்துள்ளனர்.

## பாரிய தோல்விகளையடுத்து

# முகாமையாளர் மொட்டாவை நீக்கிய ஜூவென்டஸ்

### ட்யுடரை நியமித்தது



முகாமையாளர் தியாகோ மொட்டாவை இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜூவென்டஸ் நீக்கியதாகவும், முன்னாள் வீரர் இகோர் ட்யூடரை நியமித்துள்ளதாகவும் அக்கழகம் ஞாயிற்றுக்கிழமை(23) தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியான இரண்டு தோல்விகளையடுத்து சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் ஐந்தாமிடத்தில் ஜூவென்டஸ் காணப்படுகின்றது.

கடந்தாண்டு ஜூன் மாதம் மூன்றாண்டு ஒப்பந்தத்தில் மொட்டா நியமிக்கப்பட்டிருந்தார்.

பருவகால முடிவு வரையில் ட்யூடோர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக்குக்கு தகுதி பெற்றால் ஓராண்டுக்கு புதுப் பிக்கக்கூடியதாகவுள்ளதாகவும் உள்ளதாகக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 25, மார்ச் 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.